## 97. மானம்

**961.** *இன்றி அமையாச் சிறப்பின ஆயினும்*
*குன்ற வருப விடல்*

**செய்தே தீர வேண்டிய காரியமானாலும் – அந்தச்**
**செயலைச் செய்தால் குடிப்பெருமையின்**
**செம்மை குறையுமெனில் அச் செயலை**
**செய்யவே கூடாது !**

**962.** *சீரினும் சீரல்ல செய்யாரே சீரொடு*
*பேராண்மை வேண்டு பவர்*

**சிறப்பான புகழையும்**
**சிறக்கும் பேராண்மையும் வேண்டுபவர் –**
**சிறப்பை எப்படியும் அடைய வேண்டும் என்பதற்காகச்**
**சிறுமை தரும் மானமில்லா செயல்களைச்**
**சிறிதும் செய்ய மாட்டார் !**

**963.** *பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய*
*சுருக்கத்து வேண்டும் உயர்வு*

**உற்ற செல்வம் பெருகி வரும் போது**
**உள்ளத்தில் பணிவு வர வேண்டும் !**
**உயர்ந்த செல்வம் சுருங்கிப் போகும் போது**
**உள்ளத்தில் தன்மான உணர்வு தலை**
**உயர்ந்து நடக்குமாறு உணர வேண்டும் !**

**964.** *தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்*
*நிலையின் இழிந்தக் கடை*

**உயர்ந்த ஒழுக்க நெறியிலிருந்து**
**உறுதியில்லாமல் தவறியவர்கள் – தலையிலிருந்து**
**உதிர்ந்த மயிருக்குச் சமமாக கருதப்படுவர் !**

**965.** *குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ*
*குன்றி அனைய செயின்*

**குன்றினைப் போல் உயர்ந்து,**
**குன்றாப் பெருமையால் பெருமையாக நிற்பவர்கள்**
**குன்றிமணி அளவு கூட இழிவான செயலில் ஈடுபட்டால் – தாழ்ந்து**
**குன்றிப் போய் விடுவார்கள் !**

**966.** *புகழின்றால் புத்தேணாட் டுய்யாதால் என்மற்*
*றிகழ்வார்பின் சென்று நிலை*

**மானத்தை விட்டு இகழ்வார் பின்னே – அவ**
**மானத்துடன் பின்னே பணிந்து செல்வதால்**
**இவ்வுலகத்தில் புகழும் இல்லை –**
**இனிவரும் வானுலகச் சொர்க்கமும் இல்லை !**

**967.** *ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலின் அந்நிலையே*
*கெட்டான் எனப்படுதல் நன்று*

**இகழ்வார் பின்னே சென்று பொருளை**
**இறைஞ்சி பெற்று அதனால் ஒருவன்**
**இறவாமல் உயிர் வாழ்வதை விட**
**இறந்து விடுவதே மேல் !**

**968.** *மருந்தோமற் றூனோம்பும் வாழ்க்கை பெருந்தகைமை*
*பீடழிய வந்த இடத்து*

**மானம் என்பது உயிருக்கு நிகரானது**
**மானம் தருகின்ற பெருந் தகைமை அழியும்படி**
**மானத்தைக் கெட்டுப்போக விட்டு**
**உடம்பை மட்டும் காக்கின்ற மருந்து**
**உயிரைக் காக்கும் மருந்தாகுமா ?**

**969.** *மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்*
*உயிர்நீப்பர் மானம் வரின்*

**உடலில் உள்ள மயிர் நீங்கினால்**
**உயிர் வாழாத கவரிமானைப் போல்**
**உயர்வான மானம் அழிந்தால்**
**உயர்ந்த மனிதர்கள் உயிர் வாழ மாட்டார்கள் !**

**970.** *இளிவரின் வாழாத மானம் உடையார்*
*ஒளிதொழு தேத்தும் உலகு*

**உண்மையில் இழிவு ஏற்படும் போது**
**உள்ளத்தில் அதைத் தாங்கிக் கொண்டு**
**உயிர் வாழாத மானம் உடையவரின்**
**உயர்ந்த புகழ் ஒளியை, உலகம் போற்றி வணங்கும் !**